தளம் கட்டமைப்பு

தளம்
THALAM

## தளத்தின்

# விருட்சம்

கிளை – 2024

துளை –02





# தளத்தின் விருட்சம்

கிளை - 2024

துளை -02

## உள்ளடக்கம்


- தளம் - அறிமுகம் ஆசிரியர் உரை
- மாசி மாதம் நடைபெற்ற நிகழ்வுகள்
- பங்குனி மாதத்தில் நடைபெறவிருக்கும் நிகழ்வுகள்
- மாணவர் பக்கம் - ஆக்கங்கள்
- இளைஞர்கள் பார்வையில் சமூக வலைத்தளம்
- இதழாசிரியர் குழாம் விபரம்

## தளம் - அறிமுகம்

“தெய்வத்தான் ஆகாதெனினும்
முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்”
என்பதற்கிணங்க 2018இல் அத்திவாரமிடப்பட்டு பல சிக்கல்களையும்,
சவால்களையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு “அச்சமில்லை” என்ற
பாரதி போல் தன் ஆறாம் அத்தியாயத்தில் எதிர்காலத்தை நோக்கி படியேறிக்
கொண்டிருப்பதே எங்கள் “தளம்” அமைப்பாகும்.

தற்கால இளையோரின் கல்விச் சேவை தொடர்பான சேவைகள் மட்டுமின்றி, அவர்களின் திறன்களை ஊக்கப்படுத்தி வினைத்திறனாக்குவதற்கும், இளையோரின் உலக நடப்பு ரீதியான அறியாமையை போக்குவதற்கும், எதிர்கால சவால்களை வெற்றிகரமாக எதிர் நோக்குவதற்கும் இளையோரை தயார்படுத்தும் பல திறன் விருத்தி செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருவதுடன், வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ரீதியிலான சேவைகளையும் வழங்கி வருகிறது.

திருக்கோணமலை உட்பட பல மாவட்டங்களிலும் நட்புறவுடன் செயற்பட்டு வரும் நமது அமைப்பானது இளையோர்களின் ஆதரவுடன் “திருக்கோணமலைக்கான வெளியீடு” என்பதில் நமது மாதாந்த இதழான “விருட்சத்தின் மாசி மாத மின்னிதழ், கிளை - 2024, தளை - 2” ஐ வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

## ஆசிரியர் உரை

“தளம்” அமையத்தின் ஒருங்கிணைப்பில் திருமலை இளைஞர்கள் கைவண்ணத்தில் கடந்த மாதம் வெளிவந்த விருட்சம் மாத இதழானது வாசகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.

இவ்விதழை திறம்பட வெளியிட உதவிய நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளை சமர்ப்பிப்பதோடு விருட்சத்தின் முதலாவது கிளையின் வரவேற்பு எம்மை அதிக உற்சாகத்துடன் இம்மாத இதழினை உங்கள் முன் கொண்டுவர பெரும் தூண்டுதலாக இருந்தது.

அத்துடன் கடந்த மாதம் மின்னிதழாக மாத்திரம் வெளிவந்த விருட்சம் மாத இதழ் இம்மாதம் திருமலை நூலகங்களில் வன்பிரதியாக கிடைக்கும் என்பதனை உங்களிடத்தில் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த மாத இதழின் விமர்சனங்களை கருத்தில் கொண்டு இம்முறை இவ்விதழானது பல மாற்றங்களுடன் உங்களின் வாசிப்பு பசிக்கு விருந்தளிக்கும் என்பதில் ஐயமில்லை.

இவ்விதழை பற்றிய கருத்துக்களை மற்றும் உங்களது
ஆக்கங்களை அனுப்பி வைக்க வைக்கவேண்டிய
தொலைபேசி இலக்கம் - 94 77 624 3212



# மாசி மாதத்தின் நினைவுகள்



சமூக ஊடகங்களின் நேரிய பக்கங்கள் – கருத்தமர்வு

திகதி : 01.02.2024 நேரம் : காலை 09.30 முதல் 11.30 மணி வரை

சமூக ஊடகங்களின் நேரிய பக்கங்கள் தொடர்பில் வளவாளர்கள் செல்வி. ச. பிரம்யா, திருமதி. ஹ. தர்ஷாலினி ஆகியோர்களால் “துகிர்” குழுமத்தினர் இடையே கலந்துரையாடப்பட்டதில் சமூக வலைத்தளங்களின் பாவனையால் பாதகங்கள் இருப்பினும் வலைப்பக்கங்களை பேணுதல், இணையதள வியாபாரம் மூலம் வருமானமீட்டல், வேலை வாய்ப்புகள் பெறல் போன்ற நன்மைகளும் எடுத்துரைக்கப்பட்டன. இணையதள வியாபாரத்தின் முதலீடுகள், வாடிக்கையாளர்களுடனான நம்பகத்தன்மையான கலந்துரையாடல், விற்பனை குறித்தான அனுபவங்கள் இளையோருக்கு பகிரப்பட்டது.



தளிர் அறிமுகம்

திகதி : 01.02.2024 நேரம் : மதியம் 02.00 முதல் 04.00 மணி வரை

2023இல் உயர்தரத்தை பூர்த்தி செய்தோருக்கான “தளிர்” திறன் விருத்தி செயற்றிட்டம் பற்றிய அறிமுக வகுப்புக்களின் கால அளவு, வளவாளர்களின் தன்மை, இளைஞர்களின் வருகை, செயற்றிட்டங்களின் வினைத்திறன் பற்றி தெளிவூட்டப்பட்டு, சுயதொழில் முயற்சிகளின் நிலைப்புத் தன்மை, பெருகிவரும் செயற்கை நுண்ணறிவின் தாக்கம், பல கரங்களால் மேற்கொள்ளப்படும் டிஜிட்டல் சந்தைப்படுத்தல், இருபதாம் நூற்றாண்டில் கண்களால் பார்வையிட முடியாத “மெய்நிகர் பல்கலைக்கழகங்கள்” பற்றிய அறிமுக விளக்கங்களுடன் கலந்துரையாடல் இனிதே இடம்பெற்றது.



”விருட்சம்” மின்னிதழ் வெளியீடு

திகதி : 01.02.2024 நேரம் : மாலை 04.59 முதல் 06.00 மணி வரை

மாசி மாத முதல் வியாழக்கிழமை தளத்தின் அங்கத்தவர்கள், நலன் விரும்பிகள், ஆலோசகர்களை முன்னிலைப்படுத்தி தளத்தின் மாதாந்த இதழான “விருட்சம், கிளை – 2024, தளை – 1” மின்னிதழாக வெளியிடப்பட்டது. தலைமை உரை கேசிகன் இளமுருகநாதன் அவர்களாலும், விமர்சன உரை திரு. பவித்திரன் அவர்களாலும் வழங்கப்பட்டதுடன் வருகை தந்தோரினால் பின்னூட்டங்களும் பெறப்பட்டு நன்றியுரையுடன் நிகழ்வு சிறப்பாக முடிவடைந்தது.



சமூக ஊடகங்களை பயனுள்ள வகையில் பயன்படுத்தல் – கருத்தமர்வு

திகதி : 03.02.2024 நேரம் : மதியம் 02.00 முதல் 03.30 மணி வரை

தளிர் குழுமத்தினரிடையே சமூக ஊடகங்களை எவ்வாறு பயனுள்ள முறையில் பயன்படுத்தலாம் என்பது பற்றி திருமதி. ராஜேந்தினி அவர்களால் கருத்தமர்வு மேற்கொள்ளப்பட்டது. வலைத்தளங்கள் பற்றிய இளைஞர்களின் எண்ணவோட்டங்கள் பகிரப்பட்டதுடன், தொடர்ந்து அவர்கள் இருவர் வீதம் ஒரு குழுவாகி சமூக வலைத்தளங்களின் குறியீடுகளை வரைந்து அவை பற்றி அறிந்த விடயங்களை முன்வைத்ததுடன், அவற்றின் சாதக, பாதகங்கள் ஆராயப்பட்டது.

# மாசி மாதத்தின் நினைவுகள்

### சமூக ஊடகங்கள் தொடர்பான நேரான அணுகுமுறைகள் – கருத்தமர்வு

திகதி : 06.02.2024 நேரம் : காலை 10.30 முதல் மதியம் 12 .00 மணி வரை



சமூக ஊடகங்களின் நேரான அணுகுமுறைகள் குறித்து திருமதி. சண்முகராஜா அவர்களால் குழு விளையாட்டு மூலமாக ஆரம்பிக்கப்பட்ட இக் கருத்தமர்வில், சமூக வலைத்தளங்களால் ஏற்படக்கூடிய உடல், உள ரீதியான பிரச்சினைகள், இணையதள வியாபாரம் முலம் வருமானமீட்டல், வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொள்ளுதல் போன்றவற்றின் நிதர்சனத்தை எடுத்துக் கூறினார். தொடர்ந்து இளையோர்களின் சமூகவலைத்தளம் பற்றிய அபிப்பிராயங்கள் முன்வைக்கப்பட்டதுடன், கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

### இலக்குகளை கட்டி எழுப்புதல் மற்றும் நிகழ்நிலைக் கற்றலுக்கான தளங்கள் – கருத்தமர்வு

திகதி : 07.02.2024 நேரம் : மதியம் 02.30 முதல் மாலை 05.30 வரை



“தளிர்” குழுவினரை ஊக்கமூட்டும் வகையில் சர்வதேச பல்கலைக்கழகங்களின் சான்றிதழ் பெறக்கூடிய கற்கை நெறி, அவற்றை நிகழ்நிலையில் எவ்வாறு கற்றல், இலக்கு உருவாக்கம் தொடர்பான எண்ணக்கரு ஆகியவை பற்றி வளவாளரால் விளக்கங்கள் வழங்கப்பட்டதுடன், நிகழ்நிலையில் எவ்வாறு திறன்களை விருத்தி செய்தல் பற்றி தெளிவுபடுத்தப்பட்டு குழுவினருக்கான உகந்த கற்கை நெறி தெரிவு செய்யப்பட்டு, கற்கை நெறியை முன்னெடுக்க வழி செய்யப்பட்டது.

### புகைப்பட கற்கைநெறி பயிற்சிமுகாம்

திகதி : 08.02.2024 நேரம் : காலை 09.00 முதல் மதியம் 01.00 வரை



இளையோரின் புகைப்பட துறை சார் அறிவை விருத்தி செய்யும் நோக்கில் “தளம்” அலுவலகத்தில் புகைப்பட கற்கைநெறி தொடர்பான பயிற்சிமுகாம் மூன்று தினங்கள் இடம் பெற்றது.

இதில் புகைப்படக் கருவி மற்றும் அவற்றின் வகைகள், பயன்பாடுகள் பற்றியும் கருவிகளை கையாளும் நுட்பங்கள் மற்றும் புகைப்படங்கள் பற்றிய அடிப்படை உட்பட பல விடயங்கள் செய்முறை ரீதியாக தெளிவுபடுத்தப்பட்டது.

### ”தளிர்ப்போம்” – வாழ்வியல் திறன் விருத்தி அமர்வு

திகதி : 10.02.2024 நேரம் : காலை 09.30 முதல் மதியம் 12.30 மணி வரை



இளைஞர்களின் வாழ்வியல் தொடர்பான சிந்தனைகள், திறன்களை ஊக்குவிக்கும் நோக்கில் “தளிர்ப்போம்” வாழ்வியல் திறன் விருத்தி அமர்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வமர்வில் வாழ்க்கையின் நோக்கம், மனிதப் பிறவியின் விசேடமான தன்மை என்பவை தொடர்பிலும், மனிதாபிமானம், பகுத்தறிவு, சிந்தித்தல், ஆக்கும் மற்றும் அழிக்கும் சக்தி என பல விடயங்கள் ஆராயப்பட்டதோடு, மனதை ஒருநிலைப்படுத்தும் பயிற்சிகள் மற்றும் மனதை கட்டுப்படுத்தல் ஊடாக அடையக்கூடிய வெற்றி தொடர்பில் பல்வேறுபட்ட கருத்துக்களும், முன்வைப்பும், செயல்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டது.

# மாசி மாதத்தின் நினைவுகள்



### தனிப்பட்ட நிதி மேலாண்மை – கருத்தமர்வு

திகதி : 10.02.2024 நேரம் : மதியம் 02.00 முதல் மாலை 03.30 மணி வரை

இளைஞர்கள் தங்களது சுய வருமான, செலவினங்களை முகாமைத்துவப்படுத்தல் தொடர்பில் “தளிர்” குழாமிற்கு திரு மற்றும் திருமதி. சகிலன் அவர்களால் கணக்கீடு, அவற்றின் வகை, வியாபார திட்டமிடல், முதலீடு செய்தல், பொருட்களை விளம்பரப்படுத்தல், விலைக்கழிவு தொடர்பான விளக்கம் வழங்கப்பட்டது. தொடர்ந்து இளையோர் இரு குழுக்களாக பிரிக்கப்பட்டு குடும்பத்தின் மாதாந்த வருமானம், செலவுகள் போன்ற விடயங்கள் தொடர்பாக முன்வைப்பு நிகழ்த்தப்பட்டு, செலவீனங்களை கட்டுப்படுத்தல் தொடர்பான தெளிவு வழங்கப்பட்டது.




### ”விருட்சம்” வாசகர் வட்ட கலந்துரையாடல்.

திகதி : 10.02.2024 நேரம் : மாலை 05.00 முதல் 06.00 மணி வரை

“தளம்” அமைப்பின் மாதாந்த மின்னிதழ் “விருட்சம்” இதழின் முதலாவது வாசகர் வட்ட கலந்துரையாடல் இதழாசிரியர், உப ஆசிரியர் குழுவினர் உட்பட, திருக்கோணமலையை சேர்ந்த இலக்கியவாதிகளும், விருட்சம் இதழின் வாசகர்களும் பங்கு கொண்டு இடம்பெற்றது. கலந்துரையாடலில் இதழின் விமர்சனங்களும், இதழில் இடம்பெறக்கூடிய ஆக்கப்பிரிவுகளின் கருத்துள்ள தலைப்புகளும் ஆராயப்பட்டன. வாசகர் வட்ட கலந்துரையாடல் ஒவ்வொரு மாதமும் பத்தாம் திகதியை அண்மித்த நாட்களில் இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

### தளத்தின் வாராந்த நிகழ்நிலை அமர்வு – 20 – செந்தூரன் அவர்களின் அனுபவப்பகிர்வு

திகதி : 11.02.2024 நேரம் : மாலை 09.00 முதல் 10.30 மணி வரை



இளையோரின் மனதில் பயணங்கள் எப்போதும் புதிய அனுபவங்களாகும். இதனடிப்படையில் திரு. செந்தூரன் அவர்கள் தனது சொந்த அனுபவங்களையும், வலையொளியில் காணொளிக்கான தளம் உருவாக்கும் போது செய்ய வேண்டியவை குறித்தும் அனுபவ பகிர்வை செய்ததுடன், வினாக்களுக்கான பதில்களையும் கூறி இளைஞர்களிடையே ஆர்வத்தை விதைத்து சுவாரசியமாக அமர்வை முன்னெடுத்தார்.

### அறிவாய்வியல் – அமர்வு 03

திகதி : 12.02.2024 நேரம் : மாலை 09.00 முதல் 10.00 மணி வரை

போட்டிப்பரீட்சைகளுக்காக ஏதிர்பார்க்கப்படும் வினாக்களில் இலங்கையின் அரசியல் யாப்புக்கள் முக்கியத்துவம் வகிக்கின்றன. அதனடிப்படையில் வளவாளர் திரு. துவாரகன் அவர்களால் கோல்புறுக் யாப்பு முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட யாப்புக்கள், அவற்றின் சிறப்பம்சங்கள், அவற்றினால் நாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து விரிவாக விளங்கப்படுத்தப்பட்டது.

# மாசி மாதத்தின் நினைவுகள்

### சமூகத்துடனான நல்லுறவு – கருத்தமர்வு

திகதி : 14.02.2024 நேரம் : மாலை 03.00 முதல் 05.00 மணி வரை



“தளிர்” மாணவர்களை சமூகத்துடன் இணைத்து செயற்பட ஊக்கப்படுத்தும் விதமாக வளவாளரால் அனுதாபம் மற்றும் பச்சாதாபம் பற்றியும், சவால்களுக்கு எவ்வாறு முகங்கொடுத்தல், எவ்விதம் ஏனையோருடன் உரையாடல், முடியாது என கூற தயங்குதலை நிவர்த்தி செய்தல் போன்ற பல விடயங்கள் சுவாரசிமாக தெளிவுபடுத்தப்பட்டது.

### அடிப்படை கணினி பயிற்சி மற்றும் கருத்து புரிதல் – கருத்தமர்வு

திகதி : 17.02.2024 , 27.02.2024 நேரம் : காலை 09.00 முதல் 11.30 மணி வரை



தற்காலத்தில் அடிப்படை கணினியறிவு அவசியாமதாகும். அதனடிப்படையில் தளிர் குழுவினருக்கு அடிப்படை கணினி பயிற்சி மற்றும் அது தொடர்பான கருத்து புரிதல் பற்றிய கருத்தமர்வு மேற்கொள்ளப்பட்டது. கணனியின் வன், மென்பாகங்கள் பற்றியும் தரவு, தகவல்களின் உள்ளீடு, செய்முறை, வெளியீடு குறித்தான அடிப்படைகளும், அவற்றிற்கான சாதனங்களின் செயல்பாடுகள் பற்றியும் வளவாளர்களால் தெளிவுபடுத்தப்பட்டு கருத்தமர்வு நிறைவு பெற்றது.

### அன்றாட வாழ்க்கையில் செயற்கை நுண்ணறிவு பற்றிய பயிற்சிப்பட்டறை

திகதி : 19.02.2024 நேரம் : மதியம் 02.00 முதல் மாலை 05.00 மணி வரை



“தளிர்” குழாமிற்க்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பற்றி தெளிவூட்ட மற்றும் அவற்றை அன்றாட வாழ்வில் வினைதிறனாக பயன்படுத்த வளவாளராக கேசிகன் இளமுருகநாதன் அவர்கள் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கியிருந்தார். அமர்வில் தற்காலத்தில் பாவனையிலுள்ள செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களின் வகைகள், அவற்றின் தேவைப்பாடுகள் மற்றும் அவற்றை பயன்படுத்தும் விதம் தொடர்பான பயிற்சிகள் விளங்கப்படுத்தப்பட்டு, செயற்படுத்தியும் காட்டப்பட்டது.

### வன்முறையற்ற தொடர்பாடல் – கருத்தமர்வு

திகதி : 20.02.2024 நேரம் : காலை 10.30 முதல் 11.30 மணி வரை



தளிர் மாணவர்களிடையே வன்முறை இன்றிய தொடர்பாடல் பற்றிய புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில் வளவாளர் திரு. மரியநேசன் அவர்களால் செயலமர்வு நடாத்தப்பட்டது. வன்முறையின் வரைவிலக்கணம் பற்றியும், தேவைகளின் வெளிப்பாடான உணர்வுகள் குறித்தும், கோபம், அவமதிப்பு, குற்ற உணர்ச்சி போன்றவை உருவாவதன் அடிப்படை பற்றியும் விளக்கம் அளித்தார். சிறுகதை மூலம் வன்முறையை உருவாக்கும் சந்தர்ப்பங்களை கூறி அவதானிப்பு, ஊகிப்பு போன்ற விடயங்களுக்கான விளக்கத்துடன் கருத்தமர்வு இடம்பெற்றது.

# மாசி மாதத்தின் நினைவுகள்

### கூகுள் பயன்பாடுகள் தொடர்பான கருத்தமர்வு



திகதி : 22.02.2024 நேரம் : காலை 10.30 முதல் 01.00 மணி வரை

இளையோர் தங்களின் அன்றாட பணிகளை இலகுவாக்கும் வண்ணம் எவ்வாறு கூகுளை பயன்படுத்துவது பற்றிய கருத்தமர்வு இடம்பெற்றது. அண்ட்ராய்டிற்கும், கூகுளிற்குமான தொடர்பு பற்றி விளக்கம் வழங்கப்பட்டதை அடுத்து, அதன் பயன்பாடுகளின் அறிமுகங்களுட்பட, அவற்றின் செயற்பாடுகள், சிறப்பம்சங்கள் பற்றி செய்முறை ரீதியில் விளக்கம் வழங்கப்பட்டது. இரண்டாவது அமர்வு எதிர்வரும் நாட்களில் இடம்பெறும்.

### “தளம்” அமைப்பின் மாசி மாதத்திற்கான ஒன்றுகூடல்

திகதி : 23.02.2024 நேரம் : மாலை 04.00 முதல் 05.30 மணி வரை



திருக்கோணமலை இளையோரின் திறன்விருத்தி சார்ந்து செயற்றிட்டங்களை முன்னெடுத்துவரும் “தளம்” அமைப்பின் மாசி மாதத்திற்கான ஒன்றுகூடல் அலுவலகத்தில் திரு. பிரசந்தராஜ் அவர்களின் தலைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

தளிர் குழாமின் செயற்பாடுகள், விருட்சம் இதழில் இளையோரின் ஆக்கங்கள் முதன்மைப்படுத்தல், மேலும், திருக்கோணமலையில் இயங்கிவரும் தன்னார்வ தொண்டர் அமைப்புக்களோடு சில துறைகளில் கைகோர்த்து இளையோரின் எதிர்காலத்தை வளமாகும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான திட்டங்கள் குறித்தான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு அவற்றிற்கான விளக்கங்கள் வழங்கப்பட்டு கூட்டமானது இனிதே நிறைவு பெற்றது.

### எதிர்கால உலகம் குறித்தான கலந்துரையாடல்

திகதி : 24.02.2024 நேரம் : மதியம் 02.00 முதல் மாலை 05.00 மணி வரை



நாகரீக விருத்திப் போக்கில் உலகம் தொழிநுட்பம் சார்ந்தும், வாழ்வியல் சார்ந்தும் வளர்ச்சியடைந்தே செல்கிறது. இந் நிலையில் இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்களாக மிளிர இன்றைய அனுபவம் மிக்க அறிஞர்களின் வழிப்படுத்துகை அவசியம் என்பதை உணர்ந்து, “தளிர்” குழுவினருக்கு அவர்களின் “எதிர்கால உலகம்” குறித்த கலந்துரையாடல் ஒன்றை திறமை மிக்க, அனுபவம் மிக்க வளவாளர்களை முன்னனிலைப்படுத்தி முன்னெடுக்கப்பட்டது.

இலட்சியம், திறனை எவ்வாறான முறையில் விருத்தி செய்தல்தொடர்பான கருத்துக்களுடன் தொழிநுட்ப விருத்தி, தொழில் வாய்ப்புகள் பற்றி பல விடயங்கள் பேசப்பட்டன.

# மாசி மாதத்தின் நினைவுகள்

## தளிர் குழுமத்தினருக்கான சிங்கள வகுப்பு

இளையோர் மொழி தொடர்பில் எதிர்நோக்கும் சிரமத்தை தீர்க்கும் நோக்குடன் “தளிர்” அங்கத்தவர்களுக்கான சிங்கள மொழித்திறன் வகுப்புக்கள் 03.02.2024 அன்று பி.ப 2.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. இவ் வகுப்பானது சிங்கள பேச்சாற்றலை இளையோரிடம் விருத்தி செய்யும் நோக்கிலும், எதிர் காலங்களில் வேலைவாய்ப்புக்கு தயார்படுத்தும் ரீதியிலும் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் இடம்பெற்று வருகின்றது.

## தளிர் குழுமத்தினருக்கான ஆங்கில வகுப்பு

“தளிர்” குழுமத்தினரின் ஆங்கிலம் பேசுவதிலுள்ள பயம், சரளமாக பேசுதலிலுள்ள கடினத்தன்மை, மொழித்திறன் விருத்தி போன்றவற்றுக்கான ஆங்கில வகுப்பு, செவ்வாய்க்கிழமைகளில் செல்வி. தருணிக்ஷா அவர்களாலும், இளையோரின் ஆங்கில இலக்கண விருத்தி தொடர்பிலான வகுப்புக்கள் திருமதி. பிரியஷாலினி அவர்களாலும் தளத்தின் ஏற்பாட்டில் இளையோரின் பூரண ஒத்துழைப்புடன் திறம்பட வாராந்தம் நடைபெற்று வருகின்றது.

## இயற்கை சார் செயற்பாடுகள்

“தளம்” அமைப்பினரின் பயனுள்ள பொழுதுபோக்காக அலுவலகத்தில் சேதன உற்பத்தி ஊடாக மிளகாய் கன்றுகள் நடுகை செய்யப்பட்டு வருகின்றது. அந்த வகையில் 17.02.2024 சனிக்கிழமையன்று நடுகை செய்யப்பட கன்றுகளின் விளைச்சல் பெறப்பட்டு, மேலும் புதிதாக மிளகாய் கன்றுகள் நடப்பட்டதுடன், இவற்றுக்கான சேதன பராமரிப்பு வேலைகள் செவ்வனே இடம்பெற்று வருகின்றன.

## உளவியல் சான்றிதழ் கற்கைநெறி

உளவியல் கற்கைநெறி பற்றிய இளைஞர்களின் ஆர்வத்தினடிப்படையில் இவ் வகுப்புகள் “யாலே பல்கலைகழகம்” அனுசரணையில், இணையம் ஊடாக, வளவாளரின் வழிகாட்டலில் இரண்டு மாதம் இடம்பெற்றது. அத்துடன் இளைஞர்கள் சர்வதேச பல்கலைகழக சான்றிதழ், “தளம்” அமைப்பின் சான்றிதழ் ஆகியவற்றைப் பெற்றுக்கொண்டதுடன் இறுதி வகுப்பானது 05.02.2024 அன்று இடம்பெற்று, கற்கைநெறி இனிதே பூர்த்தி செய்யப்பட்டது.

## சமூக அமைப்புகளுடனான கலந்துரையாடல்

இளையோருக்கு வினைத்திறனான சேவையையும், வளங்களையும் கொண்டு சேர்க்கும் நோக்கில், திருக்கோணமலையை சேர்ந்த சமூக மட்ட அமைப்புகளுடன் “தளம்”அமைப்பு, அடிப்படை புரிந்துணர்வுடன், இணைந்து செயற்படும் எண்ணத்துடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றது.

## தளிர் 2 – நேர்முகத்தேர்வு

தளிர் செயற்றிட்டம் வெற்றிகரமாக இடம்பெற்று வரும் நிலையில் பலரின் வேண்டுகோளிற்கிணங்க தளிர் இரண்டாம் பயிற்சி குழு பங்குனி முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. அதனடிப்படையில் தளிர் குழுமத்தினருக்கான நேர்முகத்தேர்வு ஒழுங்குசெய்யப்பட்டு இளையோரின் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டன.







Yale
















This is the








WING

# தளத்தின் பங்குனி மாதத்திற்கான திட்டமிடல்

“தளம்” அமைப்பினால் 2024ம் ஆண்டின் மாசி மாதத்திற்கான செயற்றிட்டங்கள் திட்டமிட்டபடி முடிவடைந்த நிலையில் பங்குனி மாதத்திற்கான செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு,

- 2023இல் உயர் தர பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான இரண்டு மாத திறன்விருத்தி பயிற்சிகள் “தளிர்” எனும் செயற்றிட்டத்தில் மாசி மாதம் ஆரம்பிக்கப்பட்டதற்கு அமைவாக பங்குனி மாத இறுதி வரை இவர்களுக்கான வகுப்புக்கள் தொடரப்படும்.மேலும், “தளிர்”செயற்றிட்டத்திற்கான இரண்டாவது குழுமத்தினரை உள்வாங்கும் நோக்கில் அதன் இரண்டாவது பிரிவு பங்குனி முதலாம் திகதி முதல் ஆரம்பிக்க உள்ளது.

- பங்குனி மாத சனிக்கிழமைதோறும் அரசியல் சார்ந்த விடயங்களில் இளையோரின் ஆர்வத்தை தூண்டவும், தெளிவுபடுத்தவும் “திண்ணை” எனும் செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.

- வாராந்த நிகழ்நிலை அமர்வானது, ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 8.30 மணி முதல் 10.00 மணி வரை திறமை மிக்க வளவாளர்களைக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

- அரச போட்டிப் பரீட்சைகளுக்கு தோற்றவிருக்கும் இளையோருக்கான தயார்ப்படுத்தல் வகுப்பாக மேற்கொள்ளப்படும் “அறிவாய்வியல்” நிகழ்நிலை மூலமான வகுப்புக்கள் பங்குனி மாதமும் பொது அறிவு, நுண்ணறிவு தலைப்புகளில் முன்னெடுக்கப்பட உள்ளது.

- சிங்களமொழி மூலமான பேச்சுத்திறன் வகுப்புக்கள் தொடர்ந்து ஐந்து மாதங்களுக்கு இடம்பெற தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் இம் மாதமும் வகுப்புக்கள் தொடர்ந்து நடாத்தப்படும்.

- “தளம்” அமைப்பினால் தூர நோக்கு செயற்திட்டமாக சமூகத்திற்கு அவசியமான பத்து பிரிவுகளின் கீழ் ஐம்பது மாணவர்களைக் கொண்ட குழுமத்தினரின் தெரிவு, ஆரம்பகட்ட பயிற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

- இயற்கை விவசாயம் நோக்கில் தளம் அலுவலகத்தில் முன்னெடுக்கப்படும் மிளகாய் கன்று நடுகை மேலும் விரிவாக்கப்பட்ட உள்ளது.

# “திருக்கோணேஸ்வரமும் தமிழர் பண்பாட்டு வாழ்வியலும் ”

“கோமண்டலம் தனில் கோயில்கள் கோடி கோணமலை எனும் கோடத்தில் கோளத்தின் கோணாய் கோண்மை மிகு கோபுரம் தனை கொண்டு கோடோடி பக்தர் கூடும் கோணாமுகல் திருக்கோணேஸ்வரம் கோணைநாதர் தரிசனம் வேண்டி!!!”

ஆம், மாதுமைஅம்பாள் உடனுறை திருக்கோணேஸ்வரர் அருள் பாலிக்கும் திருக்கோணேஸ்வரம் வன்மையும், தொன்மையும், பல வரலாறுகளும், புராணங்களும், அந்நியர்களும், கொள்ளையர்களும், இறைமகிமையும், பக்த கோடிகளும் என்று பற்பல நூற்றாண்டுகள் கடந்து சைவத்துடனும் தமிழுடனும் பண்பட்டு காலத்துடன் போட்டியிட்டு, நாகரிகங்கள் பல கண்டு ஒவ்வொரு தலைமுறையினுடைய வாழ்வியல் அம்சமாகவும், உலக இந்துகளின் வழிபாட்டு தலமாகவும், சைவ தமிழர்களினுடைய கலாச்சார அங்கமாகவும் தலைசிறந்து நிற்கிறது எனலாம்.

“பண்டை பெரும்புகழ்
உடையோமா? இல்லையா?
பாருக்கு வீரத்தை
சொன்னோமா? இல்லையா?
எண்டிசை வாய்மையால்
ஆண்டோமா? இல்லையா?”

என்கிறது பாவேந்தர் பாரதிதாசனுடைய உயிர்ப்பான வரிகள். மூத்த குடி தமிழ் ஆகையால் தமிழர் பண்பாடானது பல காலமாக பேணப்பட்ட, திருத்தப்பட்ட, மேம்படுத்தப்பட்ட அம்சங்களை குறித்து நின்றாலும் அது தொடர் மாற்றத்திற்கு உட்பட்டு நிற்கும் ஓர் இயங்கியல் பண்பாடே. பொதுவில் நாகரிகம் சேர்ந்த பண்பாடுமுண்டு, நாகரிகம் இல்லாத பண்பாடுமுண்டு. தமிழர் பண்பாடு இவ்விரண்டிலும் மெச்சக்கூடியது என்பர்.

ஒருயிரின் ஜனனம் முதற்கொண்டு அதன் மரணம் வரையில் வாழ்வியலின் ஒவ்வொரு அங்கத்தையும் செப்பிட்டு வைத்துள்ளனர் நம் தமிழர்கள். அறம், நன்றி மறவாமை, விருந்தோம்பல், வீரம், அகத்திணை, நட்பு, கல்வி, கலைகள் என்று இன்னும் பற்பல மங்காத தனி பெருமை கொண்டது நம் தமிழர் பண்பாடு. இது இவ்வாறு என்று வரையறுப்பது கடினமேயாயினும் சைவ சமயத்திற்கும் தமிழர் பண்பாட்டு வாழ்வியலிற்கும் ஓர் இறுகிய தொடர்புண்டு. நம் பண்பாட்டினை எடுத்தியம்பும் தொல்பொருள் சின்னங்களாக கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றன நம் ஆலயங்கள். அதீத தெய்வ நம்பிக்கை மிகு தமிழர்களின் வாழ்வியல் நிலைகளின், ஓர் நிலைகல் கோவில்கள்.

அந்த வகையில் தமிழர்களுக்கான அடையாளங்களும், நம் பண்பாட்டின் தொன்மையும் அழிந்து கொண்டிருக்கும் நிலையில், குறிப்பாக நம் நாட்டை பொருத்தமட்டில் தமிழர்களினுடைய பாரம்பரிய, கலாசார, பண்பாட்டு நிலைகளை ஒருங்கே வடித்து உலகிற்கு சான்று பகிரும் தளமாக திருக்கோணேஸ்வர தலமும் விளங்கியது, இன்றும் விளங்கிக்கொண்டிருக்கிறது, இனியும் விளங்கும் என்பதில் கருத்துப் பிழையொன்றுமில்லை.

இலங்கையின் தமிழர் பண்பாட்டின் தொண்மை பற்றி அறியமுற்படும் போது அங்கே ஒரு திறவுகோலாக திருக்கோணேஸ்வரம் அமைகிறது.இயக்கர், நாகர் எனும் பழங்குடிகளில் ஆரம்பிக்கும் நம் வரலாறுகள், தமிழ் பேரரசனும், மகாசிவபக்தனும், இயக்கர் குல வழித்தோன்றலுமாகிய பத்து கலைகளில் சிறந்தவனான தசக்ரீவன் எனும் இராவணன் தன் தாயை பேணும் வகையில் விட்டுசென்ற கல்வெட்டு இன்றும் அவன் பெயர் கூறி நிற்கிறது. மேலும் இவன் வரிசையில் இடம்பெறும் அரசர்களில் குளக்கோட்ட மன்னனை மறப்பது சிறந்ததன்று. இவ்வாறு நம் தமிழ் மன்னர்களுடைய வாழ்வியலே வரலாறாக வடிவமைக்கபடுகிறது.

“மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு”
காதலுக்கு விழா எடுத்தவர்கள் நம் தமிழர்கள். காதல், திருமணம், இல்லறம் போன்றனவற்றையும் நாம் நம் பண்பாடாக கருதுகிறோம். இன்றும் தமிழர் திருமணமுறைகள் பாரம்பரியத்திற்குரியவை. அவ்வகையில் ”இலங்கையின் மிகப்பழைய தமிழ் உரைநடை” என்று சிறப்புமிக்க நம் கோணேசர் கல்வெட்டு வரலாறு நிகழ்வுகளை மட்டுமல்லாது ”கலியாணத்துக்குச்செய்தொழும்பு, தீமைக்குச்செய்தொழும்பு” எனும் தலைப்புகளில் தமிழர்களின் பாரம்பரிய திருமண, மரண முறைகளை நம்முடன் இன்றும் பகிர்ந்து நிற்கிறது.

வாழ்வியல் சடங்குகள் மாத்திரமா?
“ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு” என்றார் வள்ளுவர். “செல்வத்தின் பயனே ஈதல்” என்ற உயரிய கோட்பாட்டை உலகறிய வைத்தவர்கள் தமிழர்கள்.” ஓர் ஆலயம் அமைக்கும் போதே கலசங்களில் நவதானியங்களிடுவது அப்பிரதேசத்தில் ஏற்படும் பஞ்ச நிலைமைகளின் போது பயன்படுத்துவதற்கே எனும் நம் முன்னோர்களின் எண்ண ஓட்டங்களை எடுத்து காட்டுகளாக இங்கே முன்வைக்கலாம். 326 வருடங்களாக தரைமட்டமாகி கிடந்த ஆலயத்தை “எல்லோரும் வாருங்கள், எம் கோணநாயகர் மண் வெல்லும் படியாக வேண்டுங்கள்” என்று தாமரைதீவானின் வரிகள் அன்று, 1961 இல் குடமுழுக்கு நடைபெற்ற போது அனைவருடைய மன நிலையையும் புலப்படுத்தியவாறு அமைகிறது. ஆலயத்திற்கு செய்யும் திருப்பணிகள் போக ஆலயத்தால் அநாதை இல்லங்களுக்கும், பல்கலைக்கழக நிகழ்வுகளுக்கும், கல்வி திட்டங்களுக்கும், சக ஆலய புணரமைப்புகளுக்கும் என்று இன்னும் பல உதவிகள் கோணைநாதர் அருளினால் அளிக்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது. கல்விகலைகளிற்கும் திருக்கோணேஸ்வரத்திற்கும் ஓர் தொடர்இணை இருந்து கொண்டேதான் இருக்கிறது.

கலை என்பது பண்பாடு எனும் பெருவட்டத்தினுள் வருவது மாத்திரமல்ல, அது குறிப்பிட்ட பண்பாட்டினையே வெளிப்படுத்துவது. சங்கம் வைத்து முத்தமிழ் வளர்த்தவர்கள் நம் சான்றோர்கள். கலைகள் அறுபத்துநான்கும் தமிழ் பண்பாட்டினை பொலிப்பிட்டு காட்டுகிறது. ஆலயங்களில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகள் இன்றும் கலைகளை வளர்க்கும் தூணாய் அமைகையில், கோணேஸ்வரத்தில் வருடந்தோறும் நடைபெறும் மாபெரும் மகாசிவராத்திரியும், திருக்கோணேஸ்வரமும் கலைகளை கோணமண்ணில் வளர்க்கும் ஓர் கலைக்கூடமாக திகழ்கிறது. கலைகள் ஒரு புறமிருக்க ஆடை, உணவு, வழிபாட்டு முறைகள், சைவ விழுமியங்கள் என்று நம் கலாசாரங்களை கடைபிடிக்க உதவும் ஓர் அறநெறி சிகரமாக திருகோணமலையிலே திருக்கோணேஸ்வரம் அமைவு பெற்றிருக்கிறது .

“அன்ன சரித்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கியொளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்”

செல்வி போஷிஹா பாலசுப்ரமணியம்
அன்புவழிபுரம்

கோணேஸ்வரத்தில் நடைபெறும் அன்னதான நிகழ்வுகளாக இருக்கட்டும், ஆதரவற்ற குழந்தைகளுக்கான கல்வி நிதியுதவி திட்டங்களாக இருக்கட்டும் ஓர் சமூகத்தின் பண்பாட்டு எழுச்சி நிலையை குறித்து நிற்கிறது எனலாம்.

பண்பாட்டு எழுச்சியா?
ஒரு இனத்தை அழிக்க வேண்டுமானால் அந்த மொழியை அழித்து விட்டால் போதுமானது என்கிறார்கள். மொழி என்பது நம் பண்பாடா? மொழி இல்லையேல் நம் பண்பாட்டினை எவ்விதம் கூறுவது? எனில்... மொழி அழிக்கபடுமா?

“கோயிலுஞ்சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை யமர்ந்தாரே” என்று கி.பி 7 ஆம் நூற்றாண்டில் எழுந்த பதிக வரிகள் நம் ஒவ்வொருவர் உள்ளங்களிலும் நிலைக்கும் வரையில் நம் மொழிக்கோ, தமிழிற்கோ, தமிழருக்கோ பாதிப்பொன்றுமில்லை. திருக்கோணேஸ்வரமும், தமிழும், தமிழரும், தமிழர் பண்பாடும், தமிழர் பண்பாட்டு வாழ்வியலும் என்றும் எப்போதும் சேர்ந்ததே!!!!........

# "சமூக வலைத்தளத்தின் போக்கு"

இன்றைய காலகட்டத்தில் மனிதர்களின் வாழ்க்கை முறை வெகுவாக மாறியுள்ளது. மிக விரைவான தகவல் ஊடக சாதனங்கள் இதனை சாத்தியமாக்கி உள்ளன. உலகில் உள்ள மனிதர்களில் இந்த தகவல் ஊடகங்களை பயன்படுத்தாமல் இருப்பவர்கள் விதிவிலக்கு என்று கூறுமளவிற்கு இதன் செல்வாக்கு அதிகரித்துள்ளது. உலகமெங்கும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட தொழில்நுட்ப முறைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சமூக ஊடகங்களினுடைய பாவனைகள் மனிதனை அடிமையாக்கி உள்ளது என்பது மறுக்க முடியாத ஓர் உண்மையாகும். "மாற்றம் ஒன்றே மாறாதது" என்பது போல நாம் அனைவரும் இம்மாற்றங்களை ஏற்றதாக மாறி பல வருடங்களாகிறது.

ஒரு சமூக வலை அமைப்பு என்பது தூரமாக இருக்கும் சமூகங்களை அருகாமையில் உணர வைக்கின்றது. இது உலகளாவிய ரீதியில் பல்லாயிரக் கோடிக்கணக்கான பயனாளர்களைக் கொண்ட ஒரு சமூகமயமட்ட ஒரு வலை அமைப்பாகும். இது உலகமயமாதலின் மாற்றத்தில் உருவாகிய ஒரு "கூர்ப்பு" என்று கூறலாம்.

1987ல் முதன்முறையாக இதற்கான அடித்தளம் இடப்பட்டது. இதற்கு "இணையம்" என்ற அத்திவாரம் வித்திட்டது. உலகத்தின் எந்த பாகத்தில் இருந்தாலும், எவ்வாறான மொழி, கலாச்சாரம் என்பவற்றை பின்பற்றினாலும் அவர்களை ஒன்று சேர்ப்பது இந்த சமூக ஊடகங்களின் பெரும் வெற்றி எனலாம். வேறுபட்டு கிடந்த மக்களை சமூக வலைத்தளங்கள் இணைக்க தொடங்கின. நீண்ட தூரங்களில் இருந்த உறவுகளை கூட இவை நெருக்கமாக்கின.

ஆரம்ப காலத்தில் மனிதர்கள் புறா, ஓலைகள், முரசு மூலம் தமது தகவல்களை மக்களுக்கு சேர்த்து தொடர்பாடினர். பின்னர் படிப்படியாக வளர்ச்சி அடைந்து கடிதங்கள் மூலம் தகவல்களை அனுப்பினர். அதன் வாயிலாக தொழில்நுட்பங்கள் வளர்ச்சி அடைய கையடக்க தொலைபேசிகள் உருவாக்கினார். அதன் பின்னர் கணினிகள் உருவாக்கப்பட்டன. கணினிகள் வாயிலாக மின்னஞ்சல் போன்ற ஊடகங்கள் வாயிலாக தொடர்பாடல் தொடங்கியது. முதன்முதலில் 1994ல் "சிக்ஸ் டிகிரி" என்ற சமூக வலைத்தளம் உருவாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2005 இல் "யுடியுப்" எனும் வீடியோ பகிரும் செயலி உருவாகி பிரபல்யம் அடைந்தது. அதனைத் தொடர்ந்து 2006ல் இன்றைய உலகின் பிரபல்யமான ஊடகங்கள் உருவாகி உலகளவில் அதிகப்பயனார்களை ஈர்த்தது. இன்று இவற்றின் வளர்ச்சி உச்சம் தொட்டுள்ளது.

அன்றாட வாழ்வும் சமூக ஊடகங்களும் அன்றாட வாழ்க்கையில் நாம் உணவு, தண்ணீரை தவிர்க்க முடியாததை போலவே சமூக ஊடகப் பாவ பாவனையும் தவிர்க்க முடியாத ஒன்றாக உருமாறியிருக்கிறது. சமூக ஊடகங்கள் நண்பர்கள், உறவுகள் எவ்வளவு தூரமாக இருந்தாலும் அவர்களை மனதிற்கு நெருக்கமாக மாற்றுகிறது. விரைவான தொடர்பாடல், விரைவான தகவல்கள், அனர்த்த முன்னறிவிப்புக்கள், உலகச் செய்திகள், சுவாரஸ்யமான தகவல்கள் இவை அனைத்தையும் மிக விரைவாக அறிந்து கொள்ள முடிகிறது. "உலகம் உள்ளங்கைக்குள் அடங்கும்" என்ற விடயத்தை சமூக ஊடகங்களே சாத்தியமாக்குகின்றன. அன்றாடம் எமது இன்பமோ, துன்பமோ அனைத்திலும் இந்த சமூக வலைத்தளங்கள் கலந்து இருக்கிறது. வாழ்த்துக்களோ, அனுதாபங்களோ, இரங்கல்களோ இங்கே தான் பகிரப்படுகின்றன. திறமைகளை பகிரவும் சமூக வலைத்தளங்கள் தளம் அமைத்துக் கொடுக்கின்றன. சமூக வலைத்தளங்களினூடாக நன்மைகளும் கிடைக்கின்றது. அதே மாதிரி தீமைகளும் ஏற்படுகின்றன. அந்த வகையில் சமூக ஊடகங்களின் மூலம் நன்மைகளாக சிலவற்றை கூற முடியும்.

மனிதனின் குறுகிய உணர்வுகளையும், கனவுகளையும் விலாசப்படுத்தியது இவைகலாகும். மனிதர்கள் வாழ்வினை கொண்டாட காரணமானவை இவைதான். புகைப்படங்கள், காணொளிகள் மூலமாகவும் அழகான நினைவுகளை பகிர்ந்து கொள்ள சமூக வலைத்தளம் உதவுகின்றது. அதேபோன்று பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் திறமைகள் சமூகத்திற்குள் முடங்கிக் கிடக்காமல் வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது இச் சமூக ஊடகமே ஆகும். கடல் கடந்து, தேசம் கடந்து மனிதமென்ற உணர்வில் பல நண்பர்களை இது உருவாக்கி இருக்கிறது. செல்ல முடியாத நாடுகளில் உள்ள மக்களின் வாழ்க்கை முறை, கலாசாரம், பண்பாடு போன்றவற்றை பார்க்க முடிகிறது. இணையவழியில் வீட்டில் இருந்தபடியே விரும்பியவர்களிடம் கல்வி கற்க முடிகிறது. தேவையான தகவல்களை தேடவும் முடிகிறது. நல்ல கலை வடிவங்கள், படைப்புகள், புத்தகங்களை இருந்த இடத்திலிருந்து பார்வையிடவும் முடிகிறது. அசாதாரணமான காலகட்டங்களில் வீட்டில் இருந்தே வேலை பார்க்கவும் முடிகின்றது. உலகமெங்கும் நடைபெறும் வன்முறைகள், பிரச்சனைகளை வெளிச்சத்துக்கு கொண்டு வரவும் உதவுகிறது. அதேபோல பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவான உதவிகள், வாய்ப்புகள் கிடைக்கவும் இந்த வலைத்தளங்கள் பெரும் உதவியாக இருக்கின்றது.

உலகமெங்கும் விளம்பரங்கள், செய்திகள், தகவல்கள், வியாபாரங்கள் சமூக வலைத்தளங்களை அடிப்படையாகக் கொண்டே இடம்பெறுகின்றன. தனி மனிதரோ, நிறுவனமோ தங்கள் வியாபாரத்தை பெருக்கிக் கொள்ள சமூக வலைத்தளங்களை பயன்படுத்துகின்றனர். தரமான பொருட்களை, சேவைகளை சிறிய வட்டத்தை தாண்டி மற்றவர்கள் அறியச் செய்வது சமீப காலங்கள் வரை எளிமையான காரியம் அல்ல. அதற்கான விளம்பர செலவுகள் இலட்சக்கணக்கில் செலவிட வேண்டும். ஆனால் பணசெலவு இல்லாமல் மக்களை எளிதில் சென்றடைய சமூக வலைத்தளங்களை பயன்படுத்துகின்றனர்.

சமூக வலைத்தளங்கள் பல நன்மைகளை தந்தாலும் பல தீமைகளையும் தருகின்றது. ஒரே வீட்டில் வாழ்பவர்கள் கூட உறவுகள் இடையே பேச முடியாத ஒரு தூரத்தை இவை உருவாக்குகின்றன. அதே நேரம் சமூக வலைத்தளங்களில் பலரும் பொழுது போக்குவதனால் கண், தலை, கை, மூளை போன்ற உடல் சார்ந்த நோய்கள் ஏற்பட இது காரணமாகிறது. மற்றும் சமூக வலைத்தள பாவனையால் அவர்களது தனிப்பட்ட முயற்சி, வேலை, கல்வி போன்றனவும் பாதிக்கப்படுகின்றன. இன்றைய சூழலில் சிறுவர்கள் அதிகம் வலைத்தளங்களை பயன்படுத்துவதனால் தவறான பக்கங்கள் அவர்களை தவறான வழியில் இட்டுச் செல்வதனால பல குற்ற செயல்களில் சிறுவர்களை ஈடுபடத் தூண்டுகிறது. சமூக வலைத்தளங்களின் பயன்பாட்டினால் பத்திரிகை, புத்தகம் வாசிக்கும் பழக்கம் போன்றன வெகுவாக குறைந்து விட்டமை வருத்தத்திற்குரியது. இவை அனைத்துமே சமூக வலைத்தளம் மூலம் ஏற்பட்ட விளைவுகளாகும்.

சமூக வலைத்தளங்களை உருவாக்கிய "அமெரிக்கா" போன்ற நாடுகளை நோக்கினால் சமூக வலைத்தளங்களை பயன்படுத்த குறைவான நேரத்தை செலவிடுகின்றனர். ஆனால், நமது நாடுகளில் உள்ள இளம் சமுதாயம் அதிகளவான நேரத்தை சமூக வலைத்தளத்தில் செலவழிக்கின்றனர். இது ஆரோக்கியமானதல்ல. ஆகவே "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு" என்பது போல சமூக வலைத்தளங்களை அளவோடு பயன்படுத்துவது நன்மை தரும்.



செல்வி ம. ஜோதிகா
தம்பலகாமம்

# திருக்கோணமலையின் அடையாளம்

இலங்கையின் 25 மாவட்டங்களில் தனக்கென ஒரு தனிச் சிறப்பைக் கொண்டு விளங்கும் கோணமாமலையான் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் திருக்கோணமலை மாவட்டமானது, இயற்கைத் துறைமுகத்தையும், பல்வேறு பௌதீக வளங்களையும், கலாசாரப் பண்பாட்டு அம்சங்களையும் தன்னகத்தே கொண்டு செழுமைமிக்க பகுதியாக விளங்குகின்றது.

"புள்ளிமான்" மீது விருப்பங் கொண்ட சீதை இராவணனால் இலங்கைக்கு கடத்திவரப்பட்ட இராமாயணக் கதை முதல் இன்று வரை "புள்ளி மான்கள்" அறியப்பட்ட ஒரு விலங்கினமாகவே விளங்குகின்றன. புள்ளிமான்களின் இருப்பானது, விரல்விட்டு எண்ணக்கூடிய பல்வேறு நாடுகளில் காணப்பட்டாலும், ஜப்பானின் "நாரா"விலும், இலங்கையின் "திருக்கோணமலை"யிலும் மாத்திரமே மக்களோடு மக்களாக இவை ஒருங்கிணைந்து வாழ்ந்து வருகின்றமையைக் காணமுடிகின்றது.

பன்னெடுங் காலமாக எம் மண்ணில் வாழ்ந்துவரும் புள்ளிமான்கள் முன்னைய காலத்தில் திருக்கோணேச்சர ஆலய எல்லைப் பகுதிக்குள் மட்டும் காணப்பட்டன. எனினும், அபிவிருத்தி அடைந்து வரும் திருக்கோணமலை நகரில் இன்றைக்கு வீதியோரங்களிலும், ஏனைய தளங்களிலும் வாழ்ந்து வரும் வன விலங்குக்கூட்டமாக இவை விருத்தியடைந்துள்ளன.

புள்ளி மான்களை வேட்டையாடுவதும், துன்புறுத்துவதும் தண்டனைக்குரிய குற்றமாக இலங்கை அரசாங்கத்தால் சட்டமியற்றப்பட்டிருந்தாலும், திருக்கோணமலையில் பரந்து, விரிந்து, வாழும் புள்ளிமான்களை பாதுக்காக்க அவைகளுக்காக சிகிச்சை அளிக்கக்கூடிய நிலையங்கள் எதுவும் நகரிலோ அல்லது நகரை அண்டிய பகுதியிலோ இல்லாதது வேதனைக்குரிய விடயமாகும். திருக்கோணமலையின் அடையாளமாக விளங்கும் புள்ளி மான்களை பாதுகாப்பது சமூகத்தவரான எம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

ஆறறிவுள்ள மனிதர்கள் தம் வாழ்வைக் கடக்கவே பல்வேறு இன்னல்களை சந்திக்க நேரிடும் போது, ஐந்தறிவு உயிர்கள் மாத்திரம் எவ்வகையில் இன்னலின்றி வாழ்ந்திடும்? ஆம்!! திருக்கோணமலை நகரின் அடையாளமாக சிறப்பு பெற்று விளங்கும் மானினத்தின் நிலைமையும் இது போன்றதே!! திருக்கோணமலையின் சுற்றுலாத்துறை விருத்தியில் மானினங்களின் பங்கும் உள்ளதென்றே கூறலாம். எங்கும் காணாத அதிசயிக்கத்தக்க வகையில் வனவிலங்கொன்று மக்களோடு இணைந்து வாழ்ந்து வருவதை காண யார் தான் விரும்பமாட்டார்கள்? இதன் வழியே திருக்கோணமலை சுற்றுலாத்துறை விருத்தி கண்டாலும், சுற்றுலாப் பயணிகளால் மானினங்கள் பாதகமான விளைவுகளை சந்திக்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றன என்பதும் நிதர்சனமான உண்மையே. தாவர உண்ணியாக புல், இலை, தளிர் என உண்டு வாழும் மான் கூட்டத்திற்கு மக்கட் கூட்டத்தினர் தாம் உண்ணும் உணவை கொடுத்து, அவற்றின் அன்றாட உணவுப்பழக்கங்களில் மாற்றங்களை கொண்டு வந்துள்ள நிலைமையும், அதை காணொளியாக படம் பிடித்தும் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து வருகின்ற தன்மையும் காணப்படுகிறது. எப்பொழுது அவைகளின் உணவுப் பழக்கங்களில் மாற்றம் நிகழ்ந்ததோ அன்று தொட்டு அவை தம் நலனில் வீழ்ச்சிப் போக்கும் ஏற்படத்தொடங்கிவிட்டது.

வனவிலங்கினமான புள்ளிமான்களை பாதுகாக்கவும், அவற்றின் நலனில் அக்கறை காட்டவும் என முழுவதுமாக வன விலங்கு பாதுகாப்பு திணைக்களத்திற்கு இலங்கை அரசினால் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. புள்ளி மானினங்களின் பாதுகாப்பானது இன்றைய கால சூழலில் நிதர்சனமில்லாத ஒன்றாகவே விளங்குகிறது. காரணம் திருக்கோணமலை நகரப்பகுதியில் பெருமளவில் வாழ்ந்து வருகின்ற இம் மானினங்களுக்கு என சிகிச்சை நிலையங்கள் எதுவும் இதுவரை காலமும் அமைக்கப்படாமையையே கூறலாம்.ஏதேனும் காயங்கள் ஏற்பட்டாலோ அல்லது உடல் நலத்தில் குறைகள் ஏற்பட்டாலோ அவற்றிற்கு சிகிச்சையளிப்பதற்கான அனுமதி அரசாங்கத்தால் கால்நடை வைத்தியர்களுக்கு இதுவரை காலமும் வழங்கப்படவில்லை. இவற்றை கண்காணிக்கவும், சிகிச்சை வழங்கவும் என பொறுப்புக்கள் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்திற்கு மட்டுமே உரித்தானதாகக் காணப்படுகிறது.

எனினும், தற்போதைய சூழலில் உடல்நலத்தில் பாதிப்பு ஏற்பட்ட மான்களுக்கு உடனடியாக சிகிச்சை வழங்கப்படுகிறதா? என்பதில் ஐயம் எழுகிறது. சாதுவான விலங்கினமான மானினங்களுக்கான சிகிச்சை வழங்கும் முறைகள் ஏனைய விலங்குகளிலிருந்து வேறுபட்டதாகவே அமைகின்றன. இதனை கருத்திற்கொண்டு, மான் இனங்களை பாதுகாத்தல், அவற்றிற்கான சிகிச்சை வழங்கள் தொடர்பான பயிற்சிகளை அறிமுகப்படுத்தும் போது அவற்றின் சிகிச்சை முறை பற்றி முவதுமாக பயின்று, அதில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவர்களை, வைத்தியர் ஒருவரின் கீழ் முதன்மைப்படுத்தி, மானினங்களுக்கான சிகிச்சை நிலையங்களை நகரில் அல்லது நகரை அண்மித்த பகுதிகளில் அமைத்து, அவர்களை அங்கு சேவைக்காக பணியமர்த்தும் போது, மானினங்களுக்கு இக்கட்டான நிலை ஏற்படும் சந்தர்ப்பங்களில், அவற்றை பாதுக்காத்து உரிய சிகிச்சையை உரிய நேரத்தில் பெற்றுக்கொடுக்க முடியும்.

அதுமாத்திரமின்றி, திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள வன விலங்கு திணைக்களத்திடம் வன விலங்குகளுக்கு சிகிச்சை வழங்கும் பொருட்டு பயணம் செய்ய ஒரே ஒரு வாகனம் இருப்பதாலும், அவ் வாகனத்தைக் கொண்டு திருக்கோணமலை மாவட்டம் முழுவதும் பணியாளர்கள் சேவை வழங்க வேண்டி இருப்பதாலும் சில வேளைகளில் அவற்றிற்கு உடனடியாக சிகிச்சை வழங்க இயலாத சந்தர்ப்பங்களில் அவை இறக்கவும் நேரிடலாம். இதனைக் கருத்திற்கொண்டு பாலூட்டி வகையைச் சார்ந்த புள்ளி மானினங்களுக்கென சிகிச்சை நிலையங்களை நகர்ப்புறத்தில் அமைக்க வேண்டிய கட்டாயம் எழுகிறது,

இவ்வாறான ஒரு திட்டத்தை செயற்படுத்த விளைவது எமது சமூகத்தினரான எமது தலையாய கடமையாகும். சமூகத்தவரான நாம் இதனை கருத்திற்கொண்டு ஒன்று திரள வேண்டும். வாயில்லா ஜீவன்களுக்காக ஒன்று சேர்வோம்!! பாதுகாப்போம்!! நம் அடையாளத்தை நிலைத்து நிற்கச் செய்வோம்!! வெற்றி வாகை சூடுவோம்!!

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!!!"

லிங்கா தேவி

## முள்ளுக்கும் திறமை உண்டு

விவசாயி ஒருவருக்கு மலை அருகாமையில் தோட்டம் ஒன்று இருந்தது. அதில் கத்தரி செடிகளை பயிர் செய்து இருந்தார். கத்தரி செடிகளுக்கு இடையே முளைக்கும் களைகள், முட்செடிகள் ஆகியவற்றை பிடுங்கி எடுத்து கத்தரி செடிகளை கண்ணும் கருத்துமாக பாதுகாத்து வந்தார். ஒருநாள் விவசாயி கத்தரி செடிகளுக்கு இடையே வளர்ந்த முட்செடிகள் ஒன்றை பிடுங்கி எறிந்தார். உடனே அந்தச் செடி கண்ணீர் விட்டு அழுதது. விவசாயி அந்த முட்செடியிடம் சென்று "ஏன் கண்ணீர் விட்டு அழுகிறாய்...?" என்று கேட்டார்.அதற்கு முட்செடி சொன்னது "நான் தான் யாருக்கும் பயன்பட போவதில்லையே. எவ்வித திறமையும் இல்லாத என்னை ஏன் கடவுள் படைத்தார்" என்று கூறி வருத்தப்பட்டது.

அதற்கு விவசாயி "கடவுள் யாரையும் காரணம் இல்லாமல் படைப்பதில்லை. எல்லோருக்கும் திறமையும், பலத்தையும் கொடுத்தே இருக்கிறார். அதை நாம் தான் கண்டுபிடித்து பயன்படுத்த வேண்டும்" என்று கூறினார். "என்ன திறமை இருக்கப் போகிறது என்னிடம். நானோ முட்செடி, பிறரை காயப்படுத்துவேனே தவிர வேறு யாருக்கும் உதவியாக இருக்க மாட்டேன்" என்று தன்னை குறைத்து பேசி அழுதது. மறுநாள் விவசாயி தன் தோட்டத்தில் இருந்து பிடுங்கி எறிந்த முட்செடிகளை எல்லாம் ஒன்று சேர்த்து அவற்றை வைத்து தோட்டத்தைச் சுற்றி வேலி ஒன்றை அமைத்தார். பின்பு அந்த முட்செடியிடம் சென்று "நீ முட்செடிதான், ஆனால் உன்னிடம் திறமையும், பலமும் இருக்கிறது. அதனால் தான் இன்று இந்த தோட்டத்தை பாதுகாக்கும் காவல்கார வேலியாக உயர்ந்து இருக்கிறாய்" என்று விவசாயி பெருமையாக கூறினார். கடவுள் படைத்த எல்லா உயிர்களுக்கும் திறமையும், பலமும் உண்டு என்பதை அப்போதுதான் உணர்ந்தது முட்செடி.

மோ. டனுஷன்

## மண்ணின் மரபுகளை அழியாமல் காப்போம்

என்னிடம் என்ன இருந்ததோ அதில் சிறந்ததை என் இறைவனுக்கு கொடுத்தேன். எனக்கு படி அளந்தவன் என்று நான் நம்பியவனுக்கு பலியிட்டு படையல் இட்டேன். பக்கத்து காட்டில் பயிரிட்ட எனது மச்சான் அரிசி பொங்கி படையல் மட்டும் இட்டான். எம் இறை ஒருபோதும் நேரில் வந்து எதையும் உண்டதில்லை, உண்ணுவானோ என்றும் எங்களுக்கு தெரியாது ஆனால் அவன் பசித்திருக்க நாம் புசிக்க மாட்டோம் ஏனெனில் அவனும் எம்மைப்போல் உயிர் உள்ளவன் என்றே நம்பினோம். வருடத்தில் ஒரு முறையோ இருமுறையோ பல முறையோ மலைபோல மடையிட்டு மனதார அவனை அழைத்து மக்களோடு கூடிக் கொண்டாடினோம்.

ஒரு முறை மாமா கூறினார் மருமகனே ஆடுகளை ஆண்டவன் முன்பு அறுக்காதே அவன் அதில் ஆனந்தம் அடைவதில்லை என்று. மூத்தோரை மீறி முடிவெடுக்காமல் ஆடுவெட்டை அகற்றிவிட்டோம், கோழிவெட்டை கொஞ்சம் ஆக்கினோம், மான் வெட்டை மறந்தே விட்டோம். ஓரிரு வருடங்கள் கழிய ஊரில் உயிரிழப்பு உச்சம் தொட்டது, வேட்டைக்கு சென்ற சித்தப்பா சிறுத்தைக்கு வேட்டையானார். மலை ஏறி சென்ற அண்ணா மண்ணுலகை விட்டு சென்றார், தேன் எடுக்க சென்ற தம்பி தேடியும் கிடைக்கவில்லை. பலிகொடுக்காததால் பலியாகின்றோம் என்று நான் சொல்ல , ஏற்கனவே கொடுத்த பலிக்குத்தான் இவை எல்லாம் என்றான் மச்சான். கருத்து வேறுபாடு கைகலப்பாகும் நிலைவர பெரியோர் மச்சானை தனியாக குலதெய்வ கோவில் வை என்றனர். கவலையுடன் கலைந்து சென்றோம்.

மரபுமாற மடையிடலை நான் தொடர்ந்தேன், மாய்க்காத படையலினை மச்சான் தொடங்கினான்.
கோவில் இப்ப ரெண்டாச்சு கொண்டாட்டமும் ரெண்டாச்சு, பிரியப் பார்த்த சனம் பிணைப்பு இன்னும் வலுத்தாச்சு. மாமாவும் மச்சானும் எம் கோவில் வருவார்கள், மச்சானின் கோவிலுக்கு கூடாரம் போட்டதே நான்தான். கொல்லாதே என்று அவனும், கொல்லு என்று நானும் இப்போது எவர்மேலும் திணிப்பதில்லை.

இராஜேஸ்வரன் சுஜீவன்

## நிதர்சனம்

வார்த்தைகளால் வதைக்காதீர்கள் – அவை
உணர்வுகளுடன் உயிரையும் கொண்டு சென்று விடும்
நிரந்தரமில்லா இவ்வாழ்க்கையில்
நிலையானவை என்று எதுவுமில்லை – ஏன்
நம் நிழல் கூட சொந்தமில்லை
கருவறையில் உதித்து காலங்கள் கடந்து
பார் தனில் வாழ்கின்றோம்
காலன் அழைக்கையில்
காணாமல் போகின்றோம் காற்றாக
பொறாமையில் புகுந்து பொறுப்புக்களை துறந்து
சுயநலமாகி சுற்றம் இழக்கின்றோம்
குரூர புத்தியால் – பல
உண்மைகளை கொல்கின்றோம்
கொலையாளி ஆகின்றோம்
கோ போல வாழ நினைத்து – கோடி என்றெண்ணி
தெருக் கோடியில் புரள்கின்றோம்
கோழைகளாக
அசுரதாண்டவமாடி
அழிக்கின்றோம்
அன்பின் கணைகளை
உருக்குலைக்கின்றோம் இவ்
உலகை....

வேல் திரவியம்

## கசக்கி எறிந்த மொட்டு ஒன்று!!

எனக்கு பயம் தான்
ஆம்!!, எனக்கு ரொம்ப பயம் தான் – என்
போல எத்தனை பேரோ!! என்ற பயம் தான் – அவர்களின் ஆசைகளும் எனது போல நிராசை ஆகிடுமோ! என்ற பயம் தான் – என்னை கிழிந்த துணி போல் போட்டது போல அவர்களுக்கும் ஆகிடுமோ என்ற பயம் தான்!!

எத்தனை, எத்தனை பயம்!!
என் பிஞ்சு நெஞ்சில், விதைத்தது யாரோ! இந்த கொடிய மிருகம் தானோ!! எனக்கு நியாயம் கிடைக்க போராட்டமா? வேண்டாம், வேண்டாம் – இனி
இதுபோல் மற்றுமொரு மொட்டை கசக்கி எறியாமல் மலரவிட்டால் போதுமல்லோ!

பட்டாம்பூச்சி போல பறந்து திரிய ஆசை இருந்தும், இன்று பரலோகம் சென்று விட்டேன் அல்லோ!
மழலையை பார்த்து காமம் கொள்ளும் மானிடா! மனதில் வைத்துக் கொள் நாளைய சமுதாயத்தின் அழிவை விழி பிதுங்கிப் பார்க்கிறது உந்தன் சமுதாயம்
வளர்ச்சி பார்த்து களைப்பாகி, அழிவை பார்க்கிறாயோ!

பிழை தான் ஆம்!!, என் பிழை தான்
என் சித்தப்பன் என்று உன் மடியில் வந்து அமர்ந்தேனே!
என் பெரியப்பன் என்று உன்னுடன் செல்லமாக விளையாடினேனே! உடன்பிறவா சகோதரனே ஆயினும் என் அண்ணனே என்று கண்மூடித்தனமாக நம்பினேனோ! உறவெல்லாம் பொய்த்துப் போக மழலை நானும் காமபசிக்கு இரை ஆகினேனோ!

உடலற்ற ஆன்மாவாகிய போதிலும், என் தேகம் வலிப்பது போல உணர்வு ஏனோ! அன்று ஏற்பட்ட வலி, இன்றும் மனதை கசக்கி பிழிகிறதே!!
என்ன நடக்கிறது என்று அறிய முன்பே நான் எங்கேயோ, என் உடல் எங்கேயோ கிடந்ததே

ஆணோ! பெண்ணோ! எல்லாம் மலராத மொட்டுக்களையே!
அதை புரிந்து கொள்ள என்ன கடினம்?

பாதுகாப்பு இல்லாத உலகில் அடுத்த குழந்தைக்கு என்ன வேலையோ
அம்மா! நீ எனக்கு பாதுகாப்பு தருவாயா? அப்படியாயின் இந்த பூமியில்
என்னை மீண்டும் பெற்றெடு இல்லையென்றால் விட்டுவிடு



செல்வி அபிநயா மும்மூர்த்தி

## நான் தொலைபேசி பேசுகிறேன்!

ஆரம்பத்தில் என்னை நன்றாக பாதுகாத்து
என் நண்பன் ஆனான்!!
போக போக தானே புரிந்தது
அவனின் பாதுகாப்பு!!

எனது நண்பன் புதிய கேம் ஒன்றை
என்னுள் இறக்கினான்
ஆரம்பத்தில் நன்றாக இருந்தது!!
நாட்கள் கடக்க அவனோ – அதில்
பைத்தியம் ஆனான் – எனக்கோ
சாவு மணி அடிக்க ஆரம்பித்தது!!

அவனுடைய காதலியின் படம்
என்னுள் வைத்து இருக்கிறான்..
கடவுளே!! என்னை தூங்கவும் விடமாட்டான்..
நடு நிசி பேய் போல் அவளை பார்ப்பான்..
காலையில் அவளின் முகம் பார்த்தால் தான்
அவனுக்கு விடியுமாம்..
இது போதாத குறையா??
பல்லும் தீட்டமாட்டான் நச்சி நச்சி என்று
கிஸ்சு வேறு!!
அப்போய் என்ன நாத்தம்!!

குளிக்கும் போதும் என்னை தூக்கிச் செல்வான்..
அந்த கருமத்தை பார்க்கவேண்டிய நிலைமை..
அத பார்த்து பார்த்து
என் கண்ணே புளிச்சு போச்சு!!

காலைக் கடனை கழிக்கவும்
காவிச் செல்கிறான் – என்னை
மூச்சு முட்டுகிறது – எனக்கு
மூதேவி அப்போது சரி
வைத்து விட்டு செல்லேனடா!!



செல்வி அ. தர்ஷிகா

## நான்தான் சமூக வலைத்தளம் பேசுகின்றேன்

சில்லென்று வீசும் காற்றில் எம் சுவாசமும் கலந்து
சிறகடிப்பது போல இணையத்தளத்தில் எம் எண்ணமும் கலந்து
இதமான வாழ்வாய் எண்ணும் இந்த இதயம்
வலைத்தள விரிவுடன் உலகம் முழுக்க உலா வரும்

சமூகம் நன்மை பெறவே என்னை கண்டுபிடித்து இருந்தார்கள் இருந்தபோதிலும்
இன்று சமூக சீர்கேட்டிற்கேய் வழிவகுத்துச் செல்கின்றேன் என அநேகமானோர் என்னைத் திட்டித் தீர்த்துள்ளார்கள்

ஆனபோதும் பட்டாம் பூச்சி சிறகடிப்பதுபோல
பாவம் நானும் சேர்ந்து சிறகடிக்கின்றேன்

என்னை பண்பாய் பயன்படுத்தினால்
பட்டாம் பூச்சிபோல பறந்திடலாம்
பட்டங்கள் பலவும் பெற்றிடலாம்
பாரினில் உயர்ந்திடலாம் .

சமூகமே உன் எண்ணத்தை தெளிவுபடுத்தி என் நன்மையை நினைத்திடு
வன்முறையை உடைத்து எறிந்து
சமூகத்திலே முன்னேறிடு .



செல்வி நிரோயினி ஞானோதயம்

## தொலையாத பேசி

நானும் நண்பனும்
உலாவிட ஆழி சென்றோம்
சென்ற வேலை முடிந்தவுடன்
மகிழ்ச்சியாக வீடு வந்தோம்

வீட்டில் உள்ள
உறவுகள் எனை
ஒரு மாறிப்பார்த்தார்கள்
ஒன்றும் விளங்கவில்லை
ஏதும் புரியவில்லை

என் மனதில்
பலவித குழப்பம்
என்ன நடந்திட்டோ
ஏது நடந்திட்டோ என்று

பிறகு தான் அறிந்தேன்
என்னோடு வந்தவன்
நானறிந்த நண்பன் என்பதைத் தாண்டி
ஊரறிந்திட்ட  தொலைபேசி என்று....

சனுஜெய்



மோ. டனுஷன்



## நல்ல நண்பர்கள் !

நல்ல நண்பரை
தேர்ந்து எடு
நலமுடன் வாழ்வில்
தினம் இணைந்து விடு...!

சோகங்கள் மகிழ்வுகள்
பகிர்ந்து விடு
சோதனை காலத்தில்
தோல் சேர்ந்து விடு...!

பகைமை பொறாமை
அகற்றி விடு
பகிர்ந்துண்டு வாழ்வில்
மகிழ்ந்து விடு...!

இனிதாய் நட்பை
தொடர்ந்து விடு
இறுதிவரை நட்பை
உறுதிப்படுத்தி விடு...!

முன்னேற்றங் கண்டு
மகிழ்ந்து விடு
முப்பொழுதும் நட்பை
மதித்து விடு...!

என்றும் நட்பை
காத்து விடு
எல்லையற்ற
நம்பிக்கையை வைத்து விடு...!

முன்னேற்றங் கண்டு
மகிழ்ந்து விடு
முப்பொழுதும் நட்பை
மதித்து விடு...!

# போய் வரவா

ரொம்ப தூரம் நடத்திட்டன்
களைக்குது
வறட்டு இருமல் கூட வந்து குரலை
அடைக்குது
கொஞ்சமா நெஞ்சின் ஓரம் வலி
இருந்தும் ஏதோ சுகம்
உனை காணத எண்ணத்தில்
நான் இருக்கையில்
கயிற்றில் தொண்டை இறுகி அடைக்கிறது
பாதி கனவில் முழித்தால்
பசி தாங்கா என் ஆசைகள்
பாசம் தானே கேட்கிறது

சில தடவை யோசித்தேன்
எனக்குள்ளே பதில் தேடினேன்
மறுபடியும் உடைந்தேன்
அழுதேன்
இதுவொன்றும் முதல் தடவையல்ல
எனக்கொன்றும் இது புதிதும் அல்ல
தோல்வியின் சொட்டை இரசிக்க விடாமல்
வளர்த்த என் பாச கண்களின் குறையா
இல்லை – நான்
தோல்விகளை பார்க்க பயந்து
வென்ற என் நாட்களின் குறையா
சில வெற்றிகளும் எனை அழவைத்தது தான்
ஆனாலும் இங்கு ஏதோ தனிமை
இத்தனையாயிரம் பேர் இருந்தும்



ஜெ. கிருபா

ஒரு நாள் அல்ல இரு நாள் அல்ல
பல நாள் கனவு என் பல்கலைக்கனவு
கிடைக்காதவன் இடத்தில் பார்த்தால்
நான் அதிஸ்டசாலி
கிடைத்தவனோடு பார்க்கையில்
நான் பாரிதாப்பட்டவன்
அன்னையின் அரவணைப்பில் அன்னமும்
அப்பனின் ஆத்திரத்தில் அரணையும்
பெற்றவன் நான் – இன்று
எனைக்குள் நானே அன்னையும் ஆனேன்
அரணும் ஆனேன்
காலத்தின் சுவடுகள் என்னுடன்
என்றெல்லாம் வீர வசனம் பேசியவன்
நான் எங்கே?
நான் ஒன்றும் இங்கு நான் இல்லை
எனை தாண்டிய சமுகத்தின் எதிர்பார்ப்பு நான்
என் கண்களின் எதிர்காலம் நான்
என் முதலாளியின் சக்தி நான்
எனை எதிர்பார்ப்பவரின் வாழ்க்கை நான்
இத்தனை பேரின் எதிர்ப்பு நானாய் இருக்கையில்
என் எதிர்பார்ப்பு என்னவென்று கேட்காமல்
போய்விட்டீர்களே?
ஒரு தடவை கேட்டிருக்கலாமே அப்பா ?
ஒரு தடவை சொல்லி இருக்கலாமே அம்மா?
உங்கள் அனுபத்தின் பாதையில் வளர்ந்த நான்
என் அனுபவத்தை தொலைத்து விட்டேனே ?

வலிகளை பார்த்து வளர்ந்து இருந்தால்
ஏனோ இன்று பதினொரு மணி வகுப்பில்
முன் வரிசையில் என் முகம் பகுதிநேர
விரிவுரையாளருக்கு தெரிந்து இருக்குமோ ?
என்னுடல் பஸ்பம் ஆகும் இந்த நேரத்தில்
போய் வரவா என் அழகிய கனவே
பொழுதெல்லாம் உன்னுடன் வாழ்ந்தது தான்
இந்த ஜென்மத்தின் .........

## இப்படிக்கு ஆசைகள்

அவன், அவள் பாடு எல்லாம்
யாருக்கு இங்கு தெரிய போகிறது
போனால் போகட்டும் என்று
கடந்து விடவும் முடியவில்லை
சில நிமிடங்கள் அழுத்தத்தில்
சில நிமிடம் அழுகையில்
மறந்து போகையிலே
மார்பு பிடித்து கொண்டு
சாகிறேன்
சாக்கு போக்கு சொல்லாமல்
சாரல் மழையில் நனையாமல்
பிடித்த இந்த பூவை
நாளிதழில் பார்ப்பதற்காகவே
யாவும் இழந்தென்னை பெற்றேன்
யாவுமாய் நின்ற ஒளி
நினைவினால் நீங்கா போது

ஜெ. கிருபா

## நண்பனா? எதிரியா?

காலங்கள் போகும் போக்கில்
வலைத்தளங்களின் ஆதிக்கமே
அதிகம்
பற்பல நிறங்களில்
பலவகை விம்பங்களை
பட்டென மனதில் ஒட்டவைக்கும்
குட்டி ராட்சசன்....
நம் அறிவை வளர்க்க
நண்பனாகவும்
தவறான வழியில் செல்ல
எதிரியாகவும் காணப்படுகிறாய் நீ....
எண்ணம் போல் வாழ்க்கை – அடிப்படையில்
நண்பனா?? எதிரியா?? – என
உனை நிர்ணயிப்பது
நமது கைகளில்..

செல்வி அனுஜா

## என் தாயே

எப்படி எல்லார் மனங்களிலும்
அலை அலையாய் திரிகிறாய்
கடலா நீ? – கவியே

அவ்வப்போது மட்டுமே இங்கு
பெரு வெள்ளமாய் வருகிறாய் – அப்படியே
அனைவரையும் உந்தன் அன்பால்
அடித்துச் செல்கிறாய்
எப்போதுமே என்மீது அன்பு
வைக்கும் உன் பேரன்பினால்

உனை பற்றி அணு அணுவாய் ரசிக்க
உனக்கென காத்திருக்கும் கண்களில்
எனதிரண்டு கண்களும் உண்டு

எத்தனை பேர் என்மேல்
அன்பு செலுத்தினாலும் என்றுமே
ஈடு இணை ஆகாது
ஏழு கடல் தாண்டினாலும்
தொடர்ந்து வரும் ஒரே அன்பு
தாயன்பு மட்டும் தான்

என்றும் உன் அன்புக்கு
நான் அடிமை என் தாயே....

செல்வி ம. ஜோதிகா

## பிரிதலின் புரிதல்...

இரண்டல்ல
அவை நான்கு
ஆம் அந்த நான்கு கண்களும்
என்னைத் தான்
என்னை மட்டுமே
நோக்கி இருந்தன...

பேருந்துப் பயணமென்பதால்
யன்னல் ஓரத்தில்
சற்று தலை சாய்க்கிறேன்
இருந்தும் தூக்கம் வரவில்லை...

ஓடுகின்ற மரங்களைத்
தேடும் விழிகளையும்
பாடுகின்ற அருவியையும்
பல்லிளித்துப் பார்க்கும்
நபர்களையும் மறந்துவிட்டேன்...

காலின் சலங்கையிசை
காதோரம் அவள்
பேசும் தமிழிசை
இவை எல்லாம்
என்னை தூங்கவிடவில்லை...

ஆறாம் இலக்க இருக்கையில் இருக்கும்
அவளும் என்னைத் தான்
பார்த்துக் கொண்டிருக்கிறாள் போலும்
கண்டும் காணாதபடி
தூங்குவது போல்
நடிக்கின்றேன்...

தோளோரம் ஒற்றை விரல்
என்னைத் தட்ட நினைப்பதை
ஏழாம் அறிவு
உற்றுப் பார்க்கிறது
நாணத்தில் அவள் இதழ்கள்
நலம் விசாரிப்பது போன்று
எனக்கு கனவு தோன்றுகிறது....

இல்லை அது நிசம்தான்
தொட்ட விரலை
பற்றிக் கொள்கிறேன்
விட்டுப் போனது
வெட்கம் மட்டுமில்லை
ஆறாம் இலக்க
இருக்கை உறவும் தான்...

இரா.நிதன்
மட்டக்களப்பு

## தனிமை

நீயும் தனிமையும் சந்திக்கும் போது
தனிமை உனை பார்த்து சிரித்தால்
அது உனை தேடி வந்தது என்று அர்த்தம்...
நீ அதை பார்த்து சிரித்தால் – அதை
நீ தேடி சென்றுள்ளாய் என்று அர்த்தம்...
சந்திப்பு தவிர்க்க முடியாதது
ஏனெனில்,
வேகமாய் ஓடி கொண்டிருக்கும் உலகிலே – நம்மை
நாமே அறிய சந்திக்க வேண்டிய ஒரே இடம்



தமிழ்மகள் சதுர்த்தி
வாழைச்சேனை, மட்டக்களப்பு

# கொரோனாவிற்கு ஒரு கடிதம்

அன்புள்ள கொரோனாவிற்கு,

உங்கள் அன்பு நண்பன் எழுதிக் கொள்வது. நீங்கள் நலமா? ஆனால் உங்கள் வருகையினால் நாங்கள் யாரும் நலமில்லை. 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பித்த உங்கள் நாடுகாண் பயணம் ஈராண்டுகள் கடந்து இன்றும் முடியவில்லை. அமெரிக்கா, இந்தியா, பிரான்ஸ், பிரித்தானியா என உங்கள் நண்பர்களை நீங்கள் விரும்பிய நாடுகளில் இருந்து தேடித்தேடி அணைத்துக் கொண்டீர்கள்.

எமது பெற்றோர்களை, உறவினர்களை, நண்பர்களை என எத்தனை பேரினை உங்கள் இலவச சேவை மூலம் மறு உலகத்திற்கு கொண்டு சென்றீர்கள் என்று நினைவிருக்கிறதா? இருந்தும் உங்களுடைய கோரப்பசி இன்னும் அடங்கவில்லையா? உம் பசி தீர்க்க இன்னும் எத்தனை உயிர்கள் தான் வேண்டும்? அத்தனை உயிர்களையும் உண்டு ஏழனத்துடன் எம்மை பார்த்து ஏப்பம் விடும் சத்தம் நிதம் நிதம் காதுகளில் ஒலித்துக் கொண்டே தான் இருக்கிறது. நாம் நினைக்கவில்லை உமது வினோத வலையில் நம் நாடும் சிக்குமென்று, சிக்கியது. வருவாய் தரும் சுற்றுலாவே வாழ்வை முடிக்கும் என நான் எண்ணி இருக்கவில்லை. நான் மட்டுமா முழு நாடுமே தான். வந்தீர்கள், அம்மை ஆக்கிரமிப்பு செய்தீர்கள், எம் உயிர்களை வயிறார உண்டீர்கள்.

உன் வீரியத்தை குறைப்பதற்காக எத்தனை விதிமுறைகள் போடப்பட்டன. எம் நாட்டில் மட்டுமா? முழு உலகத்திலேயேயும் தான். ஊரடங்கு, தடுப்பூசி கண்டுபிடிப்பு, சமூக இடைவெளி என எத்தனை, எத்தனையோ? யார், யாரோ? கூறினார்கள். நீங்கள் பயங்கரமானவர்கள் என மனிதர்களை மனித தன்மை இன்றி கொலை செய்யும் கொடூர அரக்கர்களை விட நீங்கள் சிறந்தவர் என எண்ணினோம். ஆனால், எண்ணத்தை நினைத்து தலை குனிந்து நிற்கின்றோம்.

பூட்டப்பட்ட பக்கத்து வீட்டு கதவுகள் பூட்டப்பட்ட படியே இருந்தன. பாடசாலை, பல்கலைக்கழக இருக்கைகள் மாணவர்கள் இன்றி வெறிச்சோடி கிடந்தன. ஆன்லைன் கல்வி முறையில் மாணவர்கள் மூழ்கி கிடந்தார்கள். சமூக இடைவெளி பேணும் படி கூறிக்கூறியே இன்று மனிதர்களுக்குள்ளும் இடைவெளி அதிகரித்துவிட்டது. பலரும் வந்து செல்லும் மரணவீடுகள், திருமண வீடுகள் கூட அன்று நெருக்கமானவர்களின் வருகை கூடவின்றி சாதாரணமாக இடம்பெற்றது. சுகாதாரத் துறை, பாதுகாப்புத் துறை என எத்தனை துறை சார் ஊழியர்கள் தான் இரவு பகல் பார்க்காது தன்னலம் மறந்து, சிலர் உயிரும் துறந்து உலகிற்காய் போராடினார்கள். உதவி செய்த எத்தனையோ பேரை உன் வீரியத்தால் பாராட்ட மறந்து விட்டோம். மனிதநேயமும் இயற்கையும் மறுபடியும் துளிவிட்டது மட்டுமே உன் கொடுங்கோள் ஆட்சியை நிகழ்ந்த ஒரே ஒரு நன்மை.

உமது வருகையினால் நம் நாடு நகரங்கள் எல்லாம் முடங்கியது, பசி பட்டினி தொடங்கியது. நீ இவ்வளவு கொடியவன் என நான் ஒருபோதும் நினைக்கவில்லை. எம்மை தனிமைப்படுத்தி, கொடுமைப்படுத்தி இறுதியில் எம் உடல்களையும் உறவினர்களிடம் கூட காட்டாது நெருப்பு பட்டறையினுள் செலுத்தி பற்ற வைத்த சாம்பல் கூட மற்றவர் கைபடாவண்ணம் கொண்டு செல்லும் கொடூர மரணத்தை பரிசளித்த கொரோனாவிற்கு என் கோடி சோகங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

உன்னை நொந்து கொள்ள மட்டுமே எமக்கு தகுதியுண்டு. பல மாதங்கள் போராடி மருந்துகளை கண்டுபிடித்தும், அப்போதும் உன்னை கட்டுப்படுத்த முடியாத உலகத்தையோ, உன்னை எதிர்த்து போர முடியாத உள்ளங்களையோ நொந்து கொள்ள எனக்கு உரிமையும் இல்லை, பணமும் இல்லை. வெப்பமான உணவுகளே உனக்கு எதிரி என கேள்விப்பட்டதிலிருந்து, வெப்பம் கூடிய உணவுகளை உண்டு, எமது உணர்வுகளும் அதிக வெப்பப்படுத்தி எரிக்கப்பட்ட ஊடல்களைப் போல பொசுங்கி விட்டன.

வாழ்க கொரோனா! வளர்க கொரோனா! என வாழ்த்த நான் ஒருபோதும் எத்தணிக்கவில்லை. இனமத குல பேதம் இன்றி எம்மை நீ வீழ்த்திக் கொண்டிருக்கிறாய். இப்போதும் கூறுகிறேன் இல்லை, உன்னிடம் பிச்சை கேட்கின்றேன். நம்மை விட்டுவிடு, முழுமையாக விட்டு விடு. நீ இல்லாத உலகில் சுதந்திரமாக வாழ விரும்புகின்றோம். பலரோடு சேர்ந்து மத அனுஷ்டானங்களில் இணைந்து கொள்ள விரும்புகின்றோம். உறவினர்களோடு உணர்வுகளை பகிர்ந்து கொள்ள விரும்புகின்றோம். விடு கொரோனா.


இப்போதும் உன் ஆக்கிரமிப்புகள் அயல்நாடுகளில் உள்ளது என கேள்விப்பட்டதிலிருந்து சற்று பயமாகத்தான் இருக்கிறது. நம் நாட்டிலும் சில இடங்களில் இன்னும் உன் தேடுதல் வேட்டை நடந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே பல காரணங்களினால் அடிபட்டு நசுக்கப்பட்டு நெருக்கடிக்குள் இருக்கின்றோம். இந்த நெருக்கடிக்குள் உன் அடுத்த அடியை எம்மால் தாங்கிக்கொள்ள முடியாது.

உன் அலையை இனி மேலும் நம்மால் தாங்க முடியாது. உன்னை கண்டு பயப்படுகின்றோம். உன் நோயின் வீரியத்தையும் பி. சி. ஆர். பரிசோதனையின் பயங்கரத்தையும் கண்டு பயப்படுகின்றோம். நீ இல்லாத உலகில், உறவுகளோடு உன் துணை இன்றி தனியாக வாழ வேண்டும்.

இப்படிக்கு,
கொரோனாவில்
தத்தளித்த விழுதுகள்

நசுருதீன் பாத்திமா நஸ்ரின்
வியாபார கற்கைகள் பீடம்
வவுனியா பல்கலைக்கழகம்

## கைத்தொலைபேசியின் புகைப்படம்





திரு. அல்வின்

## சித்திரமும் கைப்பழக்கம்








சகானா





பசோதரன்

# இளைஞர்கள் பார்வையில் சமூக வலைத்தளம்

“எண்ணிய எண்ணியாங்கு எய்துபவர்
எண்ணியர் திண்ணியர் ஆகப் பெறின்” என்பது போல சமூக வலைத்தளங்களிலிருந்து நாம் சில நொடிகளிலேயே எமக்கு தேவையானவற்றை அறிந்து கொள்ளமுடியும்.

சமூக வலைத்தளம் மனிதர்களை பொறுத்த வகையில் நன்மை, தீமை என இருவகையில் வேறுபடுத்தப்படும்.

சமூக வலைத்தளம் நாம் புரிந்து கொள்வதனடிப்படையிலும், நாம் எதிர் நோக்கும் சவால்களினடிப்படையிலும் நண்பனாக, எதிரியாக மாற்றமுறும்.

சமூக வலைத்தளம் நவீன விதமான ஒன்று. நமது தேவைக்கேற்ப நாம் பயன்படுத்திக்கொள்ளவது. இது ஒருவகையில் நண்பனாக இருந்தாலும் தற்காலங்களில் எதிரியாக செயற்பட்டு வருவதை காணக்கூடியதாகவுள்ளது.

# இளைஞர்கள் பார்வையில் சமூக வலைத்தளம்

சமூக வலைத்தளங்கள் என்பது மக்களின் இனைய இணைப்பை அதிகரிக்கும் ஒரு இடமாகும். இது சமூக மற்றும் உலகம் முழுவதிற்கும் தகுந்த உடனடியான உத்திகளை தரும். இது சமூகத்தின் நிலையை வெளிப்படுத்த உதவுகிறது.

மனித கைகளில் அன்றாடம் விளையாடுவதும் மறுக்கமுடியாததுமாக சமூக வலைத்தளம் காணப்படுகிறது. மனிதனின் சிந்திக்கும் ஆற்றலை படிப்படியாக குறைத்து இயந்திரத்தின் சொல் கேட்டு இயங்குகின்ற மனித சமூகத்தை உருவாக்கிக்கொண்டிருக்கும்.

இவை தற்போது தவிர்க்கமுடியாத நண்பனாகவும் தவறாக பயன்படுத்தினால் ஆட்டிப்படைக்கும் எதிரியாகவும் உள்ளது.

சமூக வலைத்தளங்கள் மக்கள் மத்தியில் மிகவும் ஒரு முக்கியமான விடயமாக காணப்படுகிறது. அந்தவகையில் சமூக வலைத்தளங்கள் எமது நினைவுகளையும் பல விடயங்களையும் தேக்கிவைப்பதற்கு உதவுகிறது.

# இதழாசிரியர் குழாம் விபரம்



செல்வி ஜிதுஷா அன்டன் ஜூட்
தலைமை ஆசிரியர்



செல்வி மு. அபிநயா
உப ஆசிரியர்



செல்வி ம. டிலானி
உப ஆசிரியர்



செல்வி ஞா. நிதர்சனா
உப ஆசிரியர்



கேஷிஹன் இளமுருகநாதன்
வடிவமைப்பாளர்

தளம்
THALAM

**எமது மண்ணுக்காய் தளத்தின் குரல் எப்பொழுதும் ஒலித்துக்கொண்டே இருக்கும்**